முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

**O.S. No. 76-2023**

**Witness**

**DW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தன் | தொழில் | |
| த/பெ | முனுசாமி | வயது | |
| ஊர் | | தேதி | 11/11/2025 |
| மாவட்டம் | | | |

இன்று (11/11/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**சத்தியமாக சொல்கிறேன்**

பொதுவாக கிராமத்தில் அக்கம்பக்கத்தில் உயடட டிே 17,11,25,வசிப்பவர்களை உறவுமுறைகளை கூறி அழைப்பது வழக்கம் என்றால் சரி. அதன் பேரில் கார்த்திகேயன் என்பவர் என்னை அண்ணன் என்று அழைப்பார் என்றாலும் நானும் அவரை தம்பி என்றுதான் அழைப்பேன் என்றாலும் சரி. பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எங்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்ட பிறகுதான் எங்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லையென்று சொன்னால் சரி. எங்கள் வீட்டிற்கு நேர் எதிர் வீடானது கார்த்திகேயன் என்பவருக்கு அப்பாவின் பூர்வீக வீடு என்று சொன்னால் சரி. அதனை விற்பனை செய்துவிட்டார்கள். எங்களது தெருவின் அகலம் 15 அடி. அதனால் எங்கள் வீட்டிற்கும் கார்த்திகேயன் என்பவரது பூர்வீக வீட்டிற்கும் இடையே 15 அடி இடைவெளி தான் இருக்கும் என்றால் சரி. கார்த்திகேயன் என்பவரது அப்பாவை நான் பிறந்ததிலிருந்து எதிர் வீட்டில் பார்த்து வளர்ந்தேன் என்றால் சரி. நான் கார்த்திகேயன் என்பவரது அப்பாவை சித்தப்பா என்று அழைப்பேன். இந்த பண பரிவர்தனை சம்பந்தமாக மனஸ்தாபம் ஏற்படுவதற்கு முன்பு எனது குடும்பத்திற்கும் கார்த்திகேயன் குடும்பத்திற்கும் நல்ல உறவு முறை இருந்ததா என்றால் இல்லை.

2) எத்தனை வருடங்களாக நல்ல உறவுமுறை இல்லையென்றால் 8 வருடங்களாக இல்லை. அதாவது பணம் கொடுக்கல் வாங்கல் மனஸ்தாபமானது 2021ம் வருடம் ஏற்பட்டது. அதற்கு 8 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எங்களுக்குள் நல்ல உறவு முறை இல்லை. எனது குடும்பத்திற்கும் கார்த்திகேயன் என்பவரது குடும்பத்திற்கும் எந்த மனஸ்தாபமும் இல்லை. பணம் வாங்கிய போது மனஸ்தாபம் இல்லை. பணம் வாங்கிய பிறகுதான் மனஸ்தாபம் ஏற்பட்டது. சாட்சி அமிர்தாசலம் என்பவர் மாமா என்று

அழைப்பார் அதனை போன்றே வீரப்பன் என்பவரும் என்னை 'மாமா என்று அழைப்பார். எனக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பை கொடுத்தேனா என்றால் 1 வாரத்திற்குள் வழக்கறிஞர் மூலமாக அனுப்பிவிட்டேன். அந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கான தகவலை நான் சொல்லி அனுப்பியதுதான் எனது வழக்கறிஞர் அனுப்பினார் என்றால் சரி. என்னிடம் காட்டப்படும் பிசாஆ-7 தான் எனது வழக்கறிஞர் வாயிலாக நான் அனுப்பிய அந்த பதில் அறிவிப்பு என்றால் சரி. அந்த பதில் அறிவிப்பில் கார்த்திகேயன் என்பவரிடம் ரூ.40ஆயிரம் வாங்கியதின் பேரில் சொல்லியுள்ளேன் என்றால் சரி. அதனை திருப்பி கொடுத்துவிட்டேன். அந்த 40 ஆயிரம் ரூபாய் எப்பொழுது வாங்கினேன் என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை. எந்த வருடம் என்றால் 2021 என்று நினைக்கின்றேன். தேதி, மாதம் எனக்கு ஞாபகமில்லை.

3)அந்த 40 ஆயிரம் ரூபாய் வாங்கும்போது யார் சாட்சியாக இருந்தனர் என்றால் யாருமில்லை நானும் எனது மனைவியும் தான் போய் வாங்கி வந்தோம். எங்கு சென்று வாங்கிவந்தோம் என்றால் அவரது வீட்டில் சென்று வாங்கிவந்தோம். நான் பணம் வாங்கும்போது கொடுக்கும்பொழுது வேறு யாருமில்லையா என்றால் கார்த்திகேயன் மற்றும் அவரது மனைவி இருந்தனர். அந்த பணம் வாங்கும்பொழுது நிரப்பப்படாத கடனுறுதி சீட்டில் நானும் எனது மனைவியும் கையொப்பம் செய்துகொடுத்தோம். அந்த 40 ஆயிரம் ரூபாய்க்கு எவ்வளவு வட்டி கொடுத்தேன் என்றால் மாதம் 2 பைசா வீதம் வட்டி கொடுத்தேன். 2 பைசா என்றால் மாதத்திற்கு ரூ.800/- என்றால் சரி. ஆனால் அவர் என்னிடம் 6 பைசா வட்டி கேட்டு அதனை நான் கொடுக்க மறுத்துவிட்டேன் என்று எனது பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளேன் என்றால் சரி. எவ்வளவு நாட்கள் வட்டி கொடுத்தோம் என்றால் 3 அல்லது 4 மாதம் வட்டி கொடுத்தோம். பைசல் செய்த பிறகு அந்த கடனுறுதி சீட்டினை நான் வாங்கிக்கொண்டேன் என்றால் இல்லை. அவர் எனக்கு கொடுக்கவில்லை. எனது பதில் அறிவிப்பில் ஜூலை மாதம் 2021ம் வருடம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி.

4)கடனுறுதி சீட்டினை எத்தனை முறை நான் திருப்பி கேட்டேன் என்றால் திருப்பி 100 முறை கேட்டுள்ளேன். யாரையாவது அழைத்து சென்று பஞ்சாயத்து செய்து கேட்டேனா என்றால் கேட்கவில்லை. கடனுறுதி சீட்டினை பைசல் செய்த பிறகும் திருப்பி தரவில்லை என்பதற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் வாயிலாக அறிவிப்பு அனுப்பி திருப்பி கேட்டேனா என்றால் இல்லை. நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது மனைவியும் 6ம் வகுப்பு வரை படித்துள்ளார். நான் கையெழுத்து போடுவேன் என்றால் சரி. படிப்பேனா என்றால் எழுத்து கூட்டி படிப்பேன். கார்த்திகேயன் என்பவர் எனது வீட்டிற்கு வந்து எனது இருசக்கர வாகனத்தை எடுத்து சென்றுவிட்டார் என்று நான் எனது பதில்

அறிவிப்பில் சொல்லியுள்ள வாகனத்தின் பதிவு எண் என்னவென்றால் அது எனக்கு ஞாபகமில்லை. அது டிவிஎஸ் ஸ்கூட்டி வகையை சேர்ந்தது. அந்த வாகனத்தை நான் நிதிநிறுவனத்திலிருந்து கடன்பெற்று வாங்கினேன் என்றால் சரி. அந்த வாகனத்தை நிதிநிறுவனத்தினர் வந்து எடுத்து சென்றுவிட்டனா ' என்றால் கார்த்திகேயன் ஓட்டிக்கொண்டிருந்தார் அதனை நிதிநிறுவனத்தினர் எடுத்து சென்றுவிட்டனர். மீண்டும் அந்த நிதிநிறுவனத்தை அணுகி எனது வாகனத்தை மீட்டு வந்தேனா என்றால் இல்லை.

5) அந்த வாகனத்தை நான் நிதிநிறுவனத்திலிருந்து வாங்கி வந்துவிட்டேன் என்றால் இல்லை. அதனை குறித்து நிதிநிறுவன அதிகாரிகளை விசாரணை செய்தால் தெரியும் என்றால் சரி. எனது பதில் அறிவிப்பில் 14/01/2022ம் தேதி மாலை 06.05 மணி அளவில் கோவிலுக்கு சென்று கொண்டிருந்தபோது என்னை வழிமறித்து கார்த்திகேயன் என்பவர் என்னிடம் பிரச்சினை ' செய்தார் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரி. பொய்யப்பாக்கம் கிராமத்திலிருந்து மாதிரிமங்கலம் எல்லையில் உள்ள அய்யனாரப்பன் கோவிலுக்கு சாமி கும்பிட சென்றுகொண்டிருந்தபோது ரோட்டில் வழிமறித்து வாதி கார்த்திகேயன் என்பவர் என்னிடம் பிரச்சினை செய்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் நடந்துசென்றேன். நான் தனியாக சென்றேனா என்றால் நானும் எனது மனைவியும் சென்றோம். நிதிநிறுவனத்திலிருந்து மீட்டு வந்த வண்டியில் தான் நானும் எனது மனைவியும் சென்றோம் என்றால் இல்லை. 21.03.2022ம் தேதி மாலை 05.30 மணி அளவில் நான் விக்கிரவாண்டி அருகே செல்லும்பொழுது கார்த்திகேயன் என்பவர் என்னை அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. ஆனால் நான் மட்டும் தான் சென்றேன். அன்றைய தினம் நான் நிதிநிறுவனத்திலிருந்து மீட்டு வந்த எனது வாகனத்தில் தான் சென்றேன் என்றால் இல்லை. நான் வேறொரு இருசக்கர வாகனம் வாங்கி அதில் சென்றேன். அந்த வாகனம் என்னுடையது என்றால் சரி. அதனை பதிவெண் எனக்கு தெரியவில்லை.

6) வாகனத்தில் சென்றபொழுது அடித்ததாக இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல. எனது மூத்த மகன் பெயர் அதியமான். இளைய மகன் பெயர் ராஜேஷ். 22/03/2022 அன்று விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் எனக்கும் கார்த்திகேயன் என்பவருக்கும் உள்ள பிரச்சினை தொடர்பாக ஒரு புகார் கொடுத்ததற்கான பதிலுரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரி. அந்த புகாரில் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான எந்த புகாரும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். தாலுக்கா காவல் நிலையத்தில் கொடுத்த புகார் நான் கொடுத்ததா அல்லது எனது மனைவி கொடுத்ததா என்றால் எனது மனைவி தான் கொடுத்தார். அப்பொழுது நான் மருத்துவமனையில் இருந்தேன். அந்த புகார்

காவல் நிலையத்தில் பதிவு செய்யவில்லை என்றால் பதிவு செய்யாமல் தகராறு செய்தார்கள் பின்னா் சிஎஸ்ஆர் கொடுத்தார்கள். அந்த சிஎஸ்ஆரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. புகாரை யார் எழுதினார்கள் என்றால் யாராவது தெரிஞ்சவா்கள் வாயிலாக எழுதியிருப்பார். அந்த புகாரை நான் படித்து பார்த்திருப்பேன் என்றால் இல்லை. அது எனக்கு கையில் கிடைக்கவில்லை. அந்த புகாரின் பேரில் நான் எனது மனைவி மற்றும் கார்த்திகேயன் ஆகியோரை போலிசார் நேரில் அழைத்து விசாரணை செய்தார்கள் என்றால் விசாரணை செய்தார்கள் ரிமான்ட் செய்யக்கோரியும் ஆனால் செய்யவில்லை. புகார் கொடுத்த 3 நாட்கள் கழித்து என்னை விசாரணை செய்தனர்.

7) எப்ஐஆர் போடவில்லை என்று எஸ்.பி அலுவலகம் சென்று புகார் செய்ததின் பேரில் சிஎஸ்ஆர் கொடுக்கப்பட்டது. வாசாஆ-1 ல் உள்ள 1லட்சம் ரூபாய் வாங்கவில்லை என்றும் அதில் கையொப்பம் போடவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. அது தான் என்னிடம் காட்டப்படும் வாசாஆ-1 என்றால் சரி. என்னிடம் காட்டப்படும் வாசாஆ-1ல் கடன் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ள பெயர் கார்த்திகேயன் என்றால் சரி. அதனை பொறுத்து கடன் வாங்கியதாக கோவிந்தன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. வாசாஆ-1ல் கையெழுத்து செய்யும் இடத்தில் கோவிந்தன் என்று எழுதப்பட்டுள்ளது. அது முத்திரை வில்லை மீது ஒன்றும் கீழ் ஒன்றும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. இரண்டு கையொப்பத்திலும் கோவிந்தன் என்றுதான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. வாசாஆ-1னை முதல் முறையாக எப்பொழுது பார்த்தேன் என்றால் தற்பொழுது என்னிடம் காட்டும்பொழுதுதான் பார்த்தேன்.

8) வாசாஆ-1ல் கோவிந்தன் என்ற பெயரின் மேல் மாரியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் யார் புகார் கொடுத்தார் என்றால் எனது மனைவி கொடுத்தார். பிசாஆ-3 தான் எனது மனைவி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் என்றால் சரி. அந்த புகார் கொடுத்த பொழுது நான் மருத்துவமனையிலிருந்து வந்துவிட்டேன் என்றால் சரி. எனது மனைவி தாலுக்கா காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை பதிவுக்கு எடுக்கவில்லை என்பதால் தான் அவர் பெயரிலேயே மாவட்ட கண்காணிப்பாளருக்கு புகார் கொடுத்தேன். நானும் எனது மனைவியும் சேர்ந்து சென்று தான் பிசாஆ-3னை கொடுத்தோம் என்றால் சரி. அதில் கார்த்திகேயன் மற்றும் எனக்கும் உள்ள பணம் கொடுக்கல் வாங்கல் மனஸ்தாபம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரி. நான் கார்த்திகேயன் என்பவருக்கு உண்மையில் பணம் கொடுக்கவேண்டும் என்பதால் தான் பிசாஆ-3ல் அந்த கொடுக்கல் வாங்கல் விவரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே நான்

பைசல் செய்த ரூபாய் 40 ஆயிரத்திற்கான கடனுறுதி சீட்டினை உண்மையிலேயே வாதி திருப்பி தரவில்லை என்றால் அதனை பற்றிய விவரத்தையும் பிசாஆ-3ல் சொல்லியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வாசாஆ-1ன் படி கடன் வாங்கிய ரூ.1லட்சத்தை திருப்பி தரவில்லை என்பதால் தான் அதனை பற்றி நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனை போன்றே தாவா கடனுறுதி சீட்டிற்கான கடன் தொகையை நான் தாவாப்படி வாதிக்கு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ-1னை தவிர வேறு எந்த ஆவணமும் வாதியின் வசம் இல்லை என்றாலும் அதனை நான் திருப்பி கேட்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட தீர்ப்பிற்கு முன் ஜப்தி என்ற இடைக்கால மனுவில் எனது சொத்தினை விற்பனை செய்யமாட்டேன் என்று கூறி அதன் பேரில் ஒரு பிணைப்பத்திரம் எழுதி நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன் என்றால் சரி. அந்த பிணைப்பத்திரத்தை எழுதி கொடுக்கும்பொழுது நான் எனது வீட்டில் தான் இருந்தேன் என்றால் இல்லை. என்னை அடித்த பிறகு வெளியில் வந்துவிட்டேன். அந்த வீடு தற்பொழுது எனது பெயரில் தான் உள்ளது என்றால் சரி. அந்த வீட்டில் யார் இருக்கிறார்கள் என்றால் ஞாபகம் இல்லை. அவர் பெயர் மணிகண்டன் என்றால் சரி. அவரது மனைவி பெயர் சிவகாமி என்றால் சரி. மணிகண்டன் என்பவர் அந்த வீட்டில் வசிப்பதற்கு என்னிடம் ரூ.8லட்சம் கொடுத்துள்ளார் என்றால் சரி. இன்னும் 1லட்சம் ரூபாய் எனக்கு பாக்கி கொடுக்கவேண்டும் என்றால் சரி. மீதமுள்ள 1லட்சம் ரூபாயை அவர் கொடுக்கும்பட்சத்தில் வீட்டினை அவருக்கு கிரயம் செய்து கொடுக்கவேண்டும் என்றால் சரி. நானும் மணிகண்டன் என்பவரும் வாய்மொழியாக பேசி முடிவு செய்துள்ளோம் என்றால் சரி. ரூ.8லட்சத்தை வாங்கும்பொழுது ஒரு பதிவு செய்யப்படாத கிரய பத்திரத்தை அவருக்கு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரி. அது எப்பொழுது எழுதிக்கொடுத்தேன் என்பது எனக்கு ஞாபகமில்லை. இந்த நீதிமன்றத்திலிருந்து இந்த வழக்கிற்கான பிணைப்பத்திரம் எழுதிக்கொடுத்த பிறகுதான் ஒப்பந்தம் எழுதி கொடுத்தேன் என்றால் சரி. மணிகண்டன் என்பவர் சொத்தினை கிரயம் செய்துகொடுக்கவேண்டி என்னிடம் அடிக்கடி தகராறு செய்து வருகிறார் என்றால் கேட்பார் தகராறு செய்யவில்லை. பொய்யப்பாக்கம் கிராமத்தில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரான அர்ச்சுனன் என்பவர் எனக்கு நன்றாக தெரிந்தவர் என்றாலும் அவர் சமீபத்தில் இறந்துவிட்டார் என்றாலும் சரி. நான் அவரிடமும் ரூ.50ஆயிரம் கடன் வாங்கிக்கொண்டு திருப்பி தரவில்லை என்று அவரது மகன் தகராறு செய்து வருகிறார் என்று சொன்னால் இல்லை. **மேற்படி கேள்வியினை பதிவு செய்ய ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனை குறிப்பு எடுத்து கொள்ளப்பட்டது**. எனது தெருவில் உள்ள அஞ்சலி தேவி என்பவரிடமிருந்து கடன்

வாங்கிக்கொண்டு அவரிடமும் திருப்பி தரவில்லை என்று தகராறு செய்து வருகிறார் என்றால் கடன் வாங்கவில்லை. அஞ்சலிதேவி என்பவரது வீடு எனது வீட்டிலிருந்து 3வது வீடு என்று சொன்னால் சரி. அதனை போன்றே எங்கள் ஊரில் உள்ள முருகன் கோவில் தெருவில் உள்ள கண்ணன் என்பவரிடமும், ராமசாமி என்பவரிடமும், பால்காரர் முருகன் என்பவரிடமும் நான் கடன் வாங்கிக்கொண்டு திருப்பி தரவிலலை என்றாலும் அவர்கள் தகராறு செய்துவருகிறார்கள் என்றால் இல்லை. பனையபுரத்தில் டீக்கடை வைத்துள்ள ஏழுமலை என்பரிடம் ரூ.50ஆயிரம் வாங்கி கொடுக்கவில்லை என்றால் அவர் தகராறு செய்து வருகிறார் என்றால் அவரிடம் போன மாதம் பைசல் செய்துவிட்டேன். நான் இந்த வழக்கிற்கான பதில் அறிவிப்பு கொடுத்தபோது எந்த முகவரியில் இருந்தேன் என்றால் பொய்யப்பாக்கம் கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோவில் என்ற வீட்டில் இருந்தேன். 2 நாட்களில் வீட்டை காலி செய்துவிட்டேன். **என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் நீதிமன்றத்தில் எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரி அது <u>நீமசாஆ- 1</u> ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நீமசாஆ-1 னை இவ்வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்த பிறகுதான் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரி. நீமசாஆ-1 னை எழுதிக்கொடுத்தபொழுது நான் பொய்யப்பாக்கம் மாரியம்மன் கோவில் என்ற முகவரியில் இல்லை என்றால் சரி. நீமசாஆ-1ல் பொய்யப்பாக்கம் மாரியம்மன் கோவில் தெரு என்று எனது முகவரியில் சொல்லியுள்ளேன் என்றால் பூர்வீக வீட்டின் முகவரியை நான் சொல்லியுள்ளேன். நீமசாஆ-1ல் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரி. நீமசாஆ-1ல் உள்ள கையொப்பத்தை நான் கையெழுத்து நிபுணர் ஆய்வுக்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரி. நான் தாக்கல் செய்த இடைக்கால மனு மற்றும் 1/2024 என்னுடைய தீர்வாக கையெழுத்து நிபுணர் அனுப்பிவைக்கும்படி தான் கேட்டுள்ளேன் என்றால் சரி.

கையொப்பம் சரியானதா என்பதனை கையொப்பம் நிபுணரிடம் தான் அனுப்பி கேட்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் வேண்டுமென்றே கையொப்பத்தை கையெழுத்து நிபுணரிடம் அனுப்பியுள்ளேன் என்றால் கையொப்ப நிபுணரிடம் அனுப்பவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. நான் பணம் வாங்கும்பொழுதே சாட்சிகள் முன்னிலையில் பணத்தை திருப்பி கொடுக்க கூடாது என்ற உள்நோக்கத்தோடு எனது கையொப்பத்தை வாசாஆ-1ல் நான் கையொப்பம் செய்யும் முறையை மாற்றி போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த உண்மை வெளிவரக்கூடாது என்பதற்காகத்தான் எனது கையொப்பத்திற்கான Impression Expert அனுப்பவேண்டுமென்று கேட்காமல் வழக்கை திசை திருப்ப வேண்டும் என்ற எண்ணத்தோடு கையெழுத்து நிபுணரிடம் அனுப்பியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கையொப்ப நிபுணரிடமோ அல்லது Impression Expert அனுப்பாமல்

அதனை தவிர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிக்கு கொடுக்கவேண்டிய பணத்தை கொடுக்ககக்கூடாது என்ற எண்ணத்தில் செயல்பட்டு வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகள் முன்னிலையில் உண்மையாக நான் கடன் பெற்ற தொகையை திருப்பி தர நான் கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கமாகவே வாங்கிய கடனை திருப்பி செலுத்த தன்மை இல்லாதவர் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு வாங்கிய கடனை திருப்பி செலுத்த பழக்கமில்லை என்பது வாதிக்கு தற்பொழுதுதான் தெரியவந்தது என்று சொன்னால் சரியல்ல. வாதி கார்த்திகேயன் என்பவர் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக பணி செய்து வருகிறார். நான் ரூ.40 ஆயிரத்தை வாதியிடமிருந்து எதற்காக வாங்கினேன் என்றால் வியாபாரத்திற்காக வாங்கினேன். இவ்வழக்கு தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

xx

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram